# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2355/12 - 2023 ඔක්තෝබර් මස 23 වැනි සඳුදා - 2023.10.23

*2355/12 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 9/2014*(II)

**1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்**

1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு 01,
2023, ஓகத்து 09.

**ஒழுங்குவிதிகள்**

2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 2021/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் ஒழுங்குவிதியானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் ஒழுங்குவிதி 20 இன் (2) ஆம் உப ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2) (அ) சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின் பந்தி (அ) இன் கீழ் தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றினை வழங்குவதற்கான கட்டணமானது ஆயிரம் ரூபாவாதல் வேண்டும் ;




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) சட்டத்தின் 39ஆ என்னும் பிரிவின் பந்தி (இ) இன் கீழ் தேசிய அடையாள அட்டையின் விபரங்களின் மெய்யுறுதிச் சான்றிதழானது-

(i) ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்தின் இயங்கலை வசதியினூடாக அதன் சார்பான கோரிக்கை செய்யப்படுமிடத்து, இருபத்தைந்து ரூபாவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஒன்றில் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உருப்படியான ஆவண வடிவமொன்றில் அல்லது இலத்திரனியல்வழி மூலமாக அதன் சார்பான கோரிக்கை செய்யப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவாக இருத்தல் வேண்டும்."

(2) அதன் ஒழுங்குவிதி 24 இல்-

(அ) அவ்வொழுங்குவிதியின் உப ஒழுங்குவிதி (3) இல், "ஓராண்டுக்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இரண்டாண்டுக்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் ;

(ஆ) அவ்வொழுங்குவிதியின் உப ஒழுங்குவிதி (4) இல் "வருடாந்தம் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(3) அதன் ஒழுங்குவிதி 25 இல்-

(அ) அவ்வொழுங்குவிதியின் உப ஒழுங்குவிதி (1) இல், "பத்தாயிரம் ரூபாவாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினைந்தாயிரம் ரூபாவாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் உப ஒழுங்குவிதி (2) இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2) பதிவுச் சான்றிதழினை புதுப்பிப்பதற்கான கட்டணமானது மூவாயிரம் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.".

இவ்வொழுங்குவிதிகளில்-

"சட்டம்" என்பது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம் என்று பொருளாகும் ; அத்துடன்

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

EOG 10-0229

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.